**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.55/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : அங்கம்ம நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 80 | கிராமம் | : கோரமங்கலம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**12.03.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்தின் புல எண் தெரியுமா என்றால் அவரது சொத்து எனக்கு எப்படி தெரியும். வழக்கு சொத்தின் புல எண்.118/18க்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அதில் எனக்கு எந்த சம்மந்தமும் இல்லை. வாதி வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்தை விட முடியாது என்று தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள என்னுடைய சொத்தின் புல எண் சொல்ல முடியுமா என்றால் புல எண்.118/19ல் 3 ஏக்கர், 118/20ல் 3 ஏக்கர் எனது சொத்தாகும். எந்த வருடம் அந்த சொத்தை நான் வாங்கினேன் என்றால் 2000ல் வாங்கினேன். சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு நில அளவை செய்தேனா என்றால் இல்லை.

2. சொத்தை கிரையம் வாங்கிய பின்பு நில அளவை செய்தேனா என்றால் ஆமாம். 2000ல் நான் கிரையம் வாங்கும்போதே நில அளவை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் வாங்கிய 1 மாதம் கழித்து நாங்கள் நில அளவை செய்தோம். 2000 முதல் 2024 வரை எந்த பிரச்சனையும் இல்லாமல் அவரவர் சொத்தில் அவரவர் பயிர் செய்தோம் என்றால் ஆமாம். 2024ல் என்

நிலத்தில் சவுக்கு மரம் பயிர் செய்து விட்டு அதை வெட்டி எடுத்து செல்ல வேறு வழியில்லாமல் வெங்கடேசன் நிலத்தின் வழியாக எடுத்து சென்றோம் என்றால் ஆமாம். என் நிலத்தின் நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் தெற்கே மேகத் நிலம், வடக்கே வெங்கடேசலு வகையறா சொத்து, கிழக்கே மற்றொரு பாய் சொத்து, மேற்கே தெக்களூர் கால்வாய் ஆகும்.

3. 2024ல் வாதி தனது நிலத்தில் சவுக்கு மரம் வைத்ததை நான் பிரச்சனை செய்ததால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் எங்கள் 50 செண்ட் நிலத்தை விட்டுவிட்டு வைக்க சொன்னோம். அவர் மொத்தமாக வைத்துவிட்டார். சவுக்கு எத்தனை வருடம் பயிர் என்றால் 3 வருடமாகும். பொதுவாக சவுக்கு வைத்தால் மீண்டும் சவுக்கு நடவு செய்வார்களா என்றால் ஒரு வருடம் நெல் பயிர் செய்தார்கள். வாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் வாதி அவரது சொத்தை தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் வாதியின் சொத்தில் வழிவிடவில்லை என்பதற்காக நாங்கள் பிரச்சனை செய்கிறோம் என்றாலும் இல்லை. நாங்கள் சவுக்கு வெட்டி கொண்டு போகும்போது அவர் வழிவிடவில்லை. வேறு ஒருவர் நிலத்தின் வழியாக கொண்டு சென்றோம்.

4. 2000லேயே சொத்து வாங்கும்போதே அளந்து பார்த்து ஆக்கிரமிப்பு எதுவும் இருந்திருந்தால் அப்போதே சொல்லியிருப்பேன் என்றாலும் 25 வருடம் கழித்து தற்போது ஆக்கிரமிப்பு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் சொத்தில் நடவு செய்யக்கூடாது என்று நான் தகராறு செய்ததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும் வாதியின் வழக்கு பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)